**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 11.08.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் போதையில்லா**
**தமிழ்நாடு விழிப்புணர்வு நாள்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூரில் ‘‘போதைப்பொருள் எதிர்ப்பு தின உறுதிமொழி’’ வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்திலுள்ள நூற்றாண்டு அரங்கத்தில் (Golden Jubilee Lecture Hall) சு. ரவிக்குமார், காவல்துறை துணை ஆணையர், ஆர்.எஸ்.புரம் (மேற்கு), சுகுமாரன், காவல்துறை உதவி ஆய்வாளர், ஆர்.எஸ்.புரம் (மேற்கு) மற்றும் திருமதி. லதா, காவல் துறை உதவி ஆய்வாளர், ஆர்.எஸ்.புரம் (மேற்கு) அவர்கள் முன்னிலையில் 11.08.2022 (வெள்ளிக்கிழமை) இன்று காலை 10.30 மணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. காவல் துறை துணை ஆணையர் அவருடைய உரையில் போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீயவிளைவுகள் அவற்றால் சமுதாயத்திலும், குடும்பத்திலும் ஏற்படும் பாதிப்புகள் ஆகியவற்றை பற்றி மாணவர்களுக்கு விளக்கினார். இவ்உறுதிமொழி எடுக்கும் நிகழ்ச்சியில் முனைவர். ந. வெங்கடேசபழனிச்சாமி, முதன்மையர் (வேளாண்மை), பேராசிரியர்கள், உதவிப்பேராசிரியர்கள் மற்றும் 500க்கும் மேற்பட்ட இளநிலை, முதுகலை மற்றும் முனைவர் பட்டம் பயிலும் மாணவ, மாணவியர்கள் போதைப் பொருள் எதிர்ப்பு உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். மேலும், வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் மாணவ, மாணவியர்கள் கையில் பதாகையுடன் விழிப்புணர்வு பேரணியும் நடத்தினர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**